# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## *2022 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 29 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2022.04.29 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

# கைமீட்கப்படமுடியாத நன்கொடை உறுதிகளை முழுமையான நன்றியீனம் என்னும் ஏதுவின்மீது கைமீட்டல் (திருத்தம்)

**2017 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கைமீட்கப்படமுடியாத நன்கொடை உறுதிகளை முழுமையான நன்றியீனம் என்னும் ஏதுவின்மீது கைமீட்டல் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

*நீதி அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

### சட்டப்பயன்பற்றிய கூற்று

**வாசகம் 2 :** இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2017 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கைமீட்கப்படமுடியாத நன்கொடை உறுதிகளை முழுமையான நன்றியீனம் என்னும் ஏதுவின்மீது கைமீட்டல் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன், திருத்தப்பட்டவாறன பிரிவின் சட்டப்பயனானது, தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றினால் ஆக்கப்பட்ட கட்டளையொன்றின்மீது மட்டுமே கைமீட்கப்படமுடியாத நன்கொடை உறுதியொன்றை முழுமையான நன்றியீனம் என்னும் ஏதுவின்மீது கைமீட்பதற்கு ஏற்பாடுசெய்வதாகும்.

**வாசகம் 3 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவை மாற்றீடுசெய்கின்றதுடன் பிரிவின் சட்டப்பயனானது, கைமீட்கப்படமுடியாத நன்கொடை உறுதியொன்றை முழுமையான நன்றியீனம் என்னும் ஏதுவின்மீது கைமீட்பதற்கு எந்தக் காலப்பகுதியினுள் வழக்கொன்று கோப்பிடப் படவேண்டுமோ அந்தக் காலப்பகுதியை மூன்றாண்டுகளுக்குக் குறைப்பதாகும்.

**வாசகம் 4 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவை மாற்றீடு செய்கின்றதுடன் பிரிவின் சட்டப்பயனானது, முடிவுறா வழக்கைப் பதிவுசெய்வதற்காக எல்லாமடக்கிய நடவடிக்கை முறையொன்றைக் குறித்துரைப்பதாகும்.

**வாசகம் 5 :** இவ்வாசகம் தெளிவுபடுத்தும் நோக்கத்துக்காக முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துவதாகும்.

## கைமீட்கப்பட முடியாத நன்கொடை உறுதிகளை முழுமையான நன்றியீனம் என்னும் ஏதுவின்மீது கைமீட்டல் (திருத்தம்)

*ச.வ.- ஓ. 48/2021*

### 2017 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கைமீட்கப்படமுடியாத நன்கொடை உறுதிகளை முழுமையான நன்றியீனம் என்னும் ஏதுவின்மீது கைமீட்டல் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்*

**1**. இச்சட்டம், 2022 ஆம் ஆண்டின்            ஆம் இலக்க, கைமீட்கப்படமுடியாத நன்கொடை உறுதிகளை முழுமையான நன்றியீனம் என்னும் ஏதுவின்மீது கைமீட்டல் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*2017 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்*

**2**. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2017 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கைமீட்கப்படமுடியாத நன்கொடை உறுதிகளை முழுமையான நன்றியீனம் என்னும் ஏதுவின்மீது கைமீட்டல் சட்டத்தின் 2 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

*"கைமீட்கப்பட முடியாத நன்கொடை உறுதியைக் கைமீட்டல்*

> **2**. கைமீட்கப்படமுடியாத நன்கொடை உறுதியொன்றை முழுமையான நன்றியீனம் என்னும் ஏதுவின்மீது கைமீட்டலானது, சொல்லப்பட்ட உறுதியைக் கைமீட்பதற்கு நன்கொடைபெறுநருக்கெதிராக அத்தகைய உறுதியின் நன்கொடையளிப்பவரினால் கோப்பிடப்பட்டவொரு வழக்கில், தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றினால் ஆக்கப்பட்ட கட்டளையொன்றின்மீது மட்டுமே செய்யப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

"வழக்கு எக்காலப் பகுதியினுள் கோப்பிடப்பட வேண்டுமோ அக்காலப் பகுதி

3. வழக்குக்கான காரணம் எத்தேதியன்று எழுந்ததோ அத்தேதியிலிருந்து மூன்றாண்டுகளினுள் 2 ஆம் பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட வழக்கொன்று கோப்பிடப்பட்டாலொழிய, நீதிமன்றம் அதனை ஏற்றுக்கவனித்தலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

"முடிவுறா வழக்கைப் பதிவு செய்வதில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறை

4. (1) வழக்காளி, இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் தொடுக்கப்பட்டவொரு வழக்கில், முடிவுறா வழக்கைப் பதிவுசெய்வதற்கான விண்ணப்பமொன்றைப் பிராதுடன் மாவட்ட நீதிமன்றத்தில் கோப்பிடுதல் அல்லது கோப்பிடச் செய்தல் வேண்டும்-

(அ) அவ்விண்ணப்பம், கைமீட்கப்படுவதற்கு நாடப்பட்ட கைமீட்கப்படமுடியாத நன்கொடை உறுதி, விடயத்துக்கேற்ப, எந்த இயைபான காணிப் பதிவகத்தில் அல்லது இயைபான உரித்துப் பதிவகத்தில் பதிவுசெய்யப்பட்டதோ அந்த இயைபான காணிப்பதிவகத்தில் அல்லது இயைபான உரித்துப் பதிவகத்தில் உள்ள, விடயத்துக்கேற்ப, காணிப் பதிவாளருக்கு அல்லது உரித்துப் பதிவாளருக்கு முகவரியிட்டனுப்பப்படுதல் வேண்டும்;

(ஆ) கைமீட்கப்படுவதற்கு நாடப்பட்ட கைமீட்கப்படமுடியாத நன்கொடை உறுதியானது முன்னர் பதிவுசெய்யப்பட்டுள்ள அப்பதிவின் சரியான முற்பதிவிலக்கத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) இயைபான காணி தொடர்பான முடிவுறா வழக்கைச் சரியான தொகுதியிலும் இருமடித்தாளிலும் பதிவுசெய்வதற்கு, விடயத்துக்கேற்ப, இயைபான காணிப் பதிவாளருக்கு அல்லது உரித்துப் பதிவாளருக்கு, முடிவுறா வழக்கின் மூலப்பிரதியும், இணை மூலப்பிரதியும் மற்றும் பிரதியொன்றும் அனுப்பிவைக்கப்படுவதனை நீதிமன்றம் செய்வித்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய முடிவுறா வழக்கின் மூலப்பிரதியை மாவட்ட நீதிமன்றப் பதிவாளருக்குத் திருப்பியனுப்புதலும் வேண்டும்.

(3) விடயத்துக்கேற்ப, காணிப் பதிவகத்தில் அல்லது உரித்துப் பதிவகத்தில் உள்ள சரியான தொகுதியிலும் இருமடித்தாளிலும் முடிவுறா வழக்கு உரியமுறையில் பதிவுசெய்யப்படுவதன்மேல், வழக்காளிக்கான பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணி பின்வருவதவற்றைக் குறிப்பிட்டு வெளிப்படுத்துகையொன்றைக் கோப்பிடுதல் வேண்டும்:-

(அ) விடயத்துக்கேற்ப, காணிப் பதிவகத்தில் அல்லது உரித்துப் பதிவகத்தில் உள்ள இயைபான பதிவீடுகள், உரியமுறையிலும் நேரடியாகவும் அவரினால் பரிசோதனை செய்யப்பட்டுள்ளனவென்றும்; அத்துடன்

(அ) அத்தகைய பதிவீடுகளின்படி அறிவித்தல் கொடுப்பதற்கு வேறு எவரேனுமாள் ஒரு திறத்தவராக்கப்படுதலாகாதென்றும்.

(4) மாவட்ட நீதிமன்றம், வெளிப்படுத்துகையின் உள்ளீடுகள்பற்றி அது திருப்திப்படின், அழைப்புக் கட்டளையை வழங்குதல் வேண்டும்.

*(5) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட விண்ணப்பம், "மூலப்பிரதி", "இணை மூலப்பிரதி" மற்றும் ''பிரதி'' எனவடையாளமிடப்பட்டு முப்பிரதிகளில் இருத்தல் வேண்டுமென்பதுடன் பொருளளவில் (117 ஆம் அத்தியாயமான) ஆவணங்களைப் பதிவுசெய்தல் கட்டளைச் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின்மூலம் விதித்துரைக்கப்பட்ட படிவத்திலிருத்தலும் வேண்டும்; அத்துடன் மாவட்ட நீதிமன்றத்தினால் வழக்குக்குக் குறித்தளிக்கப்பட வேண்டிய இலக்கத்தை உட்புகுத்துவதற்காக வெற்றிடை வெளியொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.".*

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**5**. *முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவு இத்தால் திருத்தப்படுகின்றது:-*

*(1) ''காணிப் பதிவாளர்'' என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில், ''காணிப் பதிவாளர் என்று பொருளாகும்; அத்துடன்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''காணிப் பதிவாளர் என்று பொருளாகும்;'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;*

*(2) ''காணிப் பதிவாளர்'' என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரை விலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும்:-*

*" "உரித்துப் பதிவாளர்" என்பது, 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின்கீழ் உரித்துப் பதிவாளராக நியமிக்கப்பட்டவரும், கைமீட்கப்படுவதற்கு நாடப்பட்ட கைமீட்கப்பட முடியாதவொரு நன்கொடை உறுதியின் விடயப் பொருளாக அமைகின்ற காணி எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளதோ அந்த மாவட்டத்தின்மீது நியாயாதிக்கங்கொண்டுள்ளவருமான எவரேனுமாள் என்று பொருளாகும்; அத்துடன்.".*

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**6**. *இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.*